# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P.No.78/2021 | Date : 27.09.2023 | PW1 |
|---|---|---|
| Name: நடராஜன் | S/o. **மாணிக்கம்** | |
| Evidence Recorded Time: 03.26 P.M. to 03.40 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

நான் ராசிபுரம் சார்பு நீதிமன்றத்தில் HMOP.8/2015 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாமக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் GWOP.114/2015 என்ற மனுவை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மேட்டூர் குற்றவியல் நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கான M.C.5/2014 மனுவை தாக்கல் செய்த பிறகுதான் மேற்படி இரண்டு மனுக்களையும் நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை பெண் பார்க்க சென்றபோது, எனக்கு திருமணம் செய்யும் போதும் எதிர்மனுதாரர் என்னை பிடித்துதான் திருமணம் செய்து கொள்ள ஒப்புக்கொண்டார் என்றால் சரியல்ல, அன்று இரவே அவர் அம்மாவிடம் தனக்கு பிடித்த நபரைதான் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறியுள்ளார். மேற்படி சங்கதிகளை என்னுடைய மனுவிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை பிடித்துதான் திருமணம் செய்து கொண்டார் என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு எனக்கு முன்பே இருந்த குடிபழக்கத்தால் நான் வேறு ஒரு பெண்ணை காதலித்து வந்ததாகவும், என் பெற்றோர் வற்புறுத்தியதால்தான் நான் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டதாகவும் எதிர்மனுதாரரிடம் தெரிவித்தேன் என்றால் சரியல்ல. நான் வேறு பெண்ணை காதலித்ததால்தான் நான் எதிர்மனுதாரரிடம் பிரச்சனை செய்து, நான் எதிர்மனுதாரரை நீயாகவே என்னைவிட்டு சென்றுவிடு என்று கூறினேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர்தான் என்னிடம் அரசாங்க வேலை வாங்கவில்லை என்று கூறி பிரச்சனை செய்தார். திருமணத்திற்கு முன்பு நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்ததேன் என்றாலும், அரசு வேலை வாங்கவேண்டும் என்றால் ரூபாய் ஐந்து லட்சம் பணமும், மூன்று பவுன் நகையும் உன் பெற்றோர் வீட்டில் வாங்கி வா என்று எதிர்மனுதாரிடம் நானும், என் அம்மாவும் கேட்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

சேர்ந்து வாழ பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து பேசினார்கள் என்றாலும், நான் பலமுறை பஞ்சாயத்திற்கே செல்லவில்லை என்றாலும் சரியல்ல. என் மகன் பெயர் தெரியுமா என்றால் தெரியும், ஞானசேகர் ஆகும். என் மகன் என்ன படிக்கிறார் என்றும், எந்த பள்ளியில் படிக்கிறார் என்றும் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார், நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயராக இருக்கிறேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருப்பதால் தான் இன்று வரை விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும், அவருடைய தாயாரும் மனுவில் நான் சொல்லியுள்ளது போல பேசவில்லை என்றால் சரியல்ல. பொய்யான குற்றச்சாட்டுக்களை கூறி இந்த மனுவை நான் தாக்கல் செய்துள்ளதாலும், நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும் நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.